**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஈரோடு.**

**OS**.48/2018

**பக்கம்.**

15.03.2022.

**வா.சா.1 திரு.பாலசுப்பிரமணியம் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து ஆதியில் முகமது ஜாபர் என்பவருக்கு பாத்தியப்பட்டது. வாசாஆ.1 ல் முகமது ஜாபர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1 ன் அசல் ஆவணத்தை யார்வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணம் 2 ம் பிரதிவாதி ரபிக் வசம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 11,925 சதுர அடி ஆகும். அந்த சொத்தைத்தான் முகமது ஜாபர் வாங்கியுள்ளாரா என்றால் அதைத்தான் வாங்கியுள்ளார். வாசாஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் செக்குபந்தி விபரம், நீள அகலம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முகமது ஜாபரின் குழந்தைகள் விபரம் எனக்கு தெரியும். அந்த விபரத்தை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வாசாஆ.2 விடுதலை பத்திரத்துடன் இணைக்கப் பட்ட வாரிசு சான்றிதழை படித்து தெரிந்து கொண்டேன். நான் தாக்கல் செய்த வாசாஆ.2 ஆவணத்தில் அந்த வாரிசு சான்று இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. வாசாஆ.2 விடுதலைபத்திரத்துடன் வாரிசு சான்று இணைக்கப்பட்டிருந்தால் அதன் நகலை பெறும்போது வாரிசு சான்று

ஆவண நகலும் கிடைக்கப்பெற்றிருக்கும் என்றால், வாரிசு சான்றிதழை புகைப்பட நகலாகத்தான் என்னிடம் தனியாகத்தான் கொடுத்தார்கள். வாசாஆ.2 விடுதலைப்பத்திரத்தில் அஜிமாபீவியின் கணவர் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் அமீர்பாஷா என குறிப்பிடப்பட்டு உள்ளது. அஜிமாபீவியின் கணவர் பெயர் முகமது ஜாபர் என்றும், வாசாஆ.2 விடுதலைப்பத்திரத்தில் அவரது கணவர் பெயர் அமீர்பாஷா என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே வாசாஆ.2 விடுதலைப்பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல, முகமது ஜாபர் என்பவருக்கு அமீர்பாஷா என்ற பெயரும் உள்ளதாக அவருடைய விற்கிரைய பத்திரம் வாசாஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ.1 கிரைய பத்திரத்தில் முகமது ஜாபர் என்கிற அமீர்பாஷா என குறிப்பிடப்பட்வில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராதிலோ அல்லது எனது பிரமாண ஆவணத்திலோ முகமது ஜாபர் என்பவருக்கு அமீர்பாஷா என்ற மற்றொரு பெயரும் உள்ளதாக நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.2 விடுதலைபத்திரத்தில் சொத்து விபரங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அது முகமது ஜாபருடைய முழு சொத்துக்களையும் பொருத்து எழுதப்பட்டது. அது சகல ஸ்தாவர ஜங்கம்ம சொத்துக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ.2 ல் இந்த தாவா சொத்து விபரங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. வாசாஆ.2 முகமது ஜாபருடைய முழு சொத்துக்களை

பொறுத்தும் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் ஆகும். வாசாஆ.2ல் இந்த தாவா சொத்தை குறித்து சர்வேஎண் மற்றும் அதன் விலாசம் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பல சொத்துக்கள் இருப்பதால் அனைத்து சொத்துக்களையும் பொறுத்து விடுதலைபத்திரம் ஏற்படுத்தப்பட்டதால் குறிப்பிடப்படவில்லை. நான் கூறுவது போல் வாசாஆ.2ல் தாவா சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அஜிமாபீவி பொது அதிகாரம் வழங்கிய நபரின் பெயர் ராமகிருஷ்ணன் ஆகும். வாசாஆ.3 பொது அதிகார பத்திரத்தை எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்வதற்கு அதன் முதல்வருக்கு உரிமை உண்டு என்றால் வாசாஆ.3 ரத்து செய்ய முடியாத பொது அதிகார பத்திரம் ஆகும். ரத்து செய்ய முடியாத பொது அதிகார பத்திரம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரத்து செய்யப்படமுடியாத பொது அதிகாரம் என ஒன்றும் இருக்க முடியாது என்றும், எனவே வாசாஆ.3 மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. அஜிமாபீவி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது. அஜிமாபீவியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால், அஜிமாபீவியை தரப்பினராக சேர்த்தால் தான் வழக்கை பொறுத்து இறுதி முடிவு எடுக்க முடியும் என்று சொன்னால் அவரை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அஜிமாபீவியின் பொது அதிகார முகவர் ராமகிருஷ்ணனை இந்த

வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அஜிமாபீவி மற்றும் ராமகிருஷ்ணனும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டால் உண்மை வெளியே தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் அவர்கள் இருவரையும் சேர்க்கவில்லை என்று சென்னால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் பழனிச்சாமி ஆகும். எனது தகப்பனார் இந்த சொத்தை வாசாஆ.7 படி எனக்கு தானம் செய்துள்ளார் என்றால் சரிதான். வாசாஆ.7 ல் சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து முகமது ஜாபர் அவருடைய 2 வது மகனுக்கு வாசாஆ.12 படி ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாசாஆ.12 போலியாக இருக்கும் பட்சத்தில் அதை நான் ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் வாசாஆ.12 வைத்து தான் ஈரோடு, முதல் கூடுதல் சார்பு நீதிமன்ற அவஎண்.487/2013 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதிலிருந்து நகலை பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் இந்த ஆவணம் சான்றாவணமாக குறிப்பிடப் படவில்லை என்றால் சரியல்ல.

**குவி ஒத்திவைக்கப்படுகிறது.**